# கவிதைப் பூங்கா

## கணக்கு

மனிதனோடு கணக்குப் பார்த்தால்
என்னவென்று தோன்றியது
அதாவது
மனிதனை ஒரு எண்ணாகவும்
மனிதனின் சுபாவங்களை
இன்னொரு எண்ணாகவும்
கொண்டு
கூட்டல், கழித்தல்
பெருக்கல், வகுத்தல் போன்ற
குறியீடுகளோடு
கணக்கிட்டுப் பார்த்தேன்
எத்தனை அற்புதமான விடைகள்

கூட்டல்

மனிதன் + தன்னம்பிக்கை = வெற்றி
மனிதன் + கவலை = கண்ணீர்
மனிதன் + ஆனந்தம் = புன்னகை
மனிதன் + இயலாமை = கோபம்
மனிதன் + அன்பு = காதல்
மனிதன் + ஆசை = காமம்

கழித்தல்

மனிதன் - தன்னம்பிக்கை = தோல்வி
மனிதன் - கவலை = உற்சாகம்
மனிதன் - ஆனந்தம் = சோம்பல்
மனிதன் - இயலாமை = முயற்சி
மனிதன் - அன்பு = குரோதம்
மனிதன் - ஆசை = அமைதி

பெருக்கல்

மனிதன் X தன்னம்பிக்கை = சாதனை
மனிதன் X கவலை = தற்கொலை
மனிதன் X ஆனந்தம் = ஆயுள்விருத்தி
மனிதன் X இயலாமை = அவதி
மனிதன் X அன்பு = மனிதாபிமானம்
மனிதன் X ஆசை = வக்கிரம்

வகுத்தல்

மனிதன் ÷ தன்னம்பிக்கை = ஆதங்கம்
மனிதன் ÷ கவலை = தெளிவு
மனிதன் ÷ ஆனந்தம் = குழப்பம்
மனிதன் ÷ இயலாமை = சுயபலம்
மனிதன் ÷ அன்பு = விரக்தி
மனிதன் ÷ ஆசை = நிம்மதி

புது முறை

1. மனிதன் + அன்பு – ஆசை X தன்னம்பிக்கை ÷ இயலாமை = வரலாறு
2. மனிதன் + இயலாமை – தன்னம்பிக்கை X கவலை ÷ ஆனந்தம் = பூஜ்யம்

**வானவில் பூங்கா**
**பா. விஜய்**

## திருந்தமாட்டாயா?

தினமும் கேட்கும் ஒரு வார்த்தை திருந்தமாட்டாயா..................
வீட்டின் ஒரு வேலை செய்ய மறுத்தால்
மறுமொழியாய் கிடைப்பது திருந்தமாட்டாயா...........?

பள்ளியில் சிறு தப்பு செய்தால்
பட்டென்று வரும் பதில்
நீ திருந்தமாட்டாயா...........

வீதியின் நடுவில் சிறிது விளையாடிச் சென்றால்
வெருட்டிக் கொண்டு வரும் பதில்
திருந்தமாட்டாயா.........................

தெரியாமல்தான் கேட்கிறேன்
திருந்துவது என்றால் என்ன?
யார் கெட்டழிந்து போய் இருக்கிறார்கள்
இங்கு திருத்துவதற்கு.

தன் குடியால் தன் உடலை கெடுப்பதுடன்
தன் குடும்பத்தையே நடுத்தெருவுக்கு
கொண்டு வரும் ஒரு குடிகாரனைப்
பார்த்துக் கேளுங்கள்
நீ திருந்தமாட்டாயா – என்று
அது நியாயம்.

ஊருக்குள் குழப்பம் விளைவித்து
மக்களை கதிகலங்கச் செய்யும்
ஒரு கலகக் காரனைப் பார்த்துக் கேளுங்கள்
நீ திருந்தவே மாட்டாயா – என்று.

தன் சுயநலத்திற்காக மற்ற உயிர்களை
அநியாயமாய் கொல்லும்
ஒரு கொலைகாரனைப் பார்த்துக் கேளுங்கள்
நீ திருந்த மாட்டாயா........ என்று

அதை விட்டு விட்டு வெறுமனே விளையாடிக்
கொண்டு இருக்கும் பாலர்களைப் பார்த்து
திருந்தமாட்டாயா........ திருந்தமாட்டாயா
என தினம் கேட்டு

மொட்டிலே அந்த மலரை கருக வைக்கும்
இந்த சமுதாயத்தைப் பார்த்து
இனி நாங்கள் கேட்க வேண்டும்
நீ......... திருந்தவே....... மாட்டாயா........... என்று.

**வானவில் பூங்கா**
**பா. விஜய்**

# I, II D இலங்கையும் மேலைத்தேய நாடுகளும்

இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பியர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | போர்த்துக்கேயர் | – | 1505 – | 1658 | வரை , | ( 153 வருடம் ) |
| 2. | ஒல்லாந்தர் | – | 1658 – | 1796 | வரை | ( 138 வருடம் ) |
| 3. | பிரித்தானியர் | – | 1796 – | 1948 | வரை | ( 152 வருடம் ) |

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது முதல் தொடர்ச்சியாக போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், பிரித்தானியர் என்னும் ஐரோப்பிய இனத்தவர்கள் சுமார். 443 வருடங்கள் பல்வேறு நிலைகளின் இலங்கை நாட்டினுள் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டி இருந்தனர். ஐரோப்பியர்களின் செல்வாக்கு அரசியல் அடிப்படையில் மட்டுமன்றி பொருளாதார,கலாசாரத் துறைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது.



வாஸ்கோ-ட-காமா சென்ற பாதை

## கீழைத்தேச நாடுகளுக்கு போர்த்துக்கீசர்களின் வருகை

போத்துக்கலைத் தாயகமாகக் கொண்ட ஐரோப்பிய இனத்தவர்களாகிய போர்த்துக்கீசர்கள் பல்வேறு காரணங்களினால் துாண்டப்பட்டு தமது தாய்நாட்டில் இருந்து மிகவும் தொலைவிலுள்ள கீழைதேய நாடுகளுக்கு வந்தனர். அவர்கள் அவ்வாறு வந்தமைக்கான காரணங்கள் யாவையென ஆராய்வோம்.

ஐரோப்பிய இனத்தவர்கள் மிகவும் நீண்டகாலமாக கீழைத்தேச நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட வியாபாரப் பொருட்களை இடைத்தரகர்களின் மூலம் பெற்றனர் அவற்றை ஐரோப்பாவில் விற்பனை செய்வதையும், நுகர்வதையும் பழக்கமாகக் கொண்டிருந்தனர். ஐரோப்பிய மன்னர்களினதும். பிரபுக்களினதும் பயன்பாட்டுக்குத் தேவையான யானைத்தந்தங்கள்,முத்துக்கள், மாணிக்கங்கள், சுகந்தப் பொருட்கள் போன்ற ஆடம்பரப் பொருட்களையும், பெரும்பான்மை மக்களின் உணவைச் சுவையூட்டுவதற்கும், அவற்றை நீண்ட காலம் கெடாது பாதுகாப்பதற்கும் பயன்படக்கூடிய ஏலம், கறுவா, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றையும் ஐரோப்பிய வியாபாரிகள் அத்தரகர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இவ் வியாபார நடவடிக்கைகளுக்காகவே அவர்கள் அனேகமாக தரைமார்க்கத்தை பயன்படுத்தினார்கள்.

கி.பி 14ஆம் நூற்றாண்டின் போது துருக்கியர்கள் ஐரோப்பாவில் மிகவும் வலிமையுடைய இனமாக மாறினர். படிப்படியாக ஐரோப்பாவில் அனேகமான பகுதிகளில் துருக்கியர்களின் அதிகாரம் பரவியமையினால் ஐரோப்பியர்கள் பலத்த சவால்களைச் சமாளிக்க வேண்டிய நிலையேற்பட்டது.

இதற்கிடையில் 1453ம் ஆண்டில் கொன்ஸ்தாந்திநோபில் நகரம் ஓடோமன் துருக்கியினால் கைப்பற்றப்பட்டது. இதனால் கீழைத்தேச நாடுகளையும் இணைத்த வியாபாரப் பாதையின் முக்கியமான கேந்திரமாகிய கொன்ஸ்தாந்திநோபின் நகரம் துருக்கியின் கீழ் வந்தமையினால், ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் இடையில் நிகழ்ந்த வியாபாரத் தொடர்புகளுக்கு தடையேற்பட்டது. இவ்வாறு துருக்கியின் அதிகாரம் விரிவடைந்தமை ஐரோப்பியர்களுக்கு பொதுவாக பெரும் சவாலாக அமைந்ததுடன், குறிப்பாக மேற்குறிப்பிட்ட வியாபாரத் தொடர்புகள் வீழ்ச்சியடைவதற்கு உரிய காரணமாகியது. இவ்வாறு வியாபாரத் தொடர்புகள் விழ்ச்சியடைந்த முறையை இப்போது நாம் கற்போம்.

இக்காலத்தில் கீழைத்தேச நாடுகளில் இருந்து பெறப்படும் வாசனைத்திரவியங்களுக்கு ஐரோப்பியர்கள் மத்தியில் பெரும் கேள்வி காணப்பட்டது. அவை அவர்களது அன்றாட வாழ்க்கையில் அத்தியாவசியப் பொருள்கள் என்ற நிலையை அடைந்து காணப்பட்டன. மேற்குறிப்பிட்டவாறு துருக்கியரின் அதிகாரங்கள் பரவியதன் காரணமாக அவ்வியாபாரப் பொருட்களை ஐரோப்பாவிற்கு கொண்டு வருவதில் தடைகள் ஏற்பட்டன. துருக்கியர்களினால் கொள்ஸ்தாந்திநோபில் நகரம் கைப்பற்றப்பட்டதன் பின் அப்பிரதேசங்களினூடாக நடைபெற்ற வியாபாரம் தடைப் பட்டது. அதனால் ஐரோப்பிய இனத்தவர் செங்கடலைச் சூழவுள்ள பிரதேசங்களை தமது வியாபார நடவடிக்கை களுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர்.

எனினும் செங்கடற் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வியாபாரம் கொன்ஸ்தாந்திநோபில் நகரத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட வியாபாரத்தைப் போல் சிறப்பாக அமையவில்லை. அவ்வாறு அமைந்தமைக்கு உரிய காரணங்கள் பலவாகும். அவற்றை எமக்குப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- செங்கடலினூடாக வியாபாரத்தில் ஈடுபடும் போது எகிப்திய சுல்தான்களுக்கு குறிப்பிட்ட வியாபாரப் பொருட்களுக்கு அதிக வரி செலுத்த வேண்டிய நிலையேற்பட்டது.

- செங்கடலினூடாக மேற்கொள்ளப்பட்ட வியாபாரத்தின் போது நிலையம் காரணமாக மிகவும் வசதியான நிலையில் விளங்கிய எகிப்திய வியாபாரிகளுடன் போட்டியிட வேண்டிய நிலையேற்பட்டது.

ஒரு புறமாக இவ்வாறான தடைகள் காணப்பட்ட போதிலும் பாரசீகத்தினூடாக வியாபாரத்தை மேற்கொள்வதில் ஐரோப்பியர்களுக்கு எவ்வித தடைகளும் ஏற்படவில்லை. ஐரோப்பியர்களுக்கு இப்பிரதேசங்களினூடா வாசனைத்திரவிய வியாபாரத்தை மேற்கொள்வதற்கு முடிந்ததை அவர்களுக்கு ஓரளவு திருப்தியளித்தது. எனினும் பாரசீகமும் இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றிய காரணத்தினால் அவ்வழியையும் ஐரோப்பியர்களுக்கு இழக்க வேண்டி யேற்பட்டது. இந் நிலைமைகளினால் எகிப்திய வியாபாரிகளின் மூலம் கீழைத்தேச நாடுகளின் வாசனைத் திரவியங்களைப் பெற்றுக் கொண்டு அவற்றை ஐரோப்பாவுக்கு கொண்டு செல்ல வேண்டியேற்பட்டது. எனினும் எகிப்தியர்கள் அதிக வரியை வசூலிக்க முற்பட்டமை ஐரோப்பியர்களுக்கு பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்தது. இவ்வாறான நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வியாபாரத்தில் ஐரோப்பியர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கவில்லை. வாசனைத் திரவியங்களின் வியாபாரம் தொடர்பாக ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்ட இவ்வாறான தடைகள் காரணமாக கீழைத்தேச நாடுகளுக்கு புதிய கடல் மார்க்கங்களை தேடுவதில் அவர்கள் ஆவலுடன் ஈடுபட்டனர்.

புதிய கடல் மார்க்கங்களைத் தேடுவதற்காக அவர்கள் முற்பட்டமைக்கு மேற்குறிப்பிட்டவை மட்டும் காரணமல்ல. இதற்காக அவர்களின் முயற்சிகளை - தீவிரப்படுத்துவதற்குக் காரணமாயமைந்த சில விடங்களை ஆராய்வோம்.

வியாபாரம் தொடர்பாக வெனிஸ், ஜெனோவா நகர வியாபாரிகளுக்கிடையில் காணப்பட்ட போட்டிகள் இதற்கான மற்றுமோர் காரணமாகும். வெனிஸ் வர்த்தகர்களுக்கு இக்காலத்தில் துருக்கியர்களின் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஏற்பட்ட போதிலும் அவர்கள் செங்கடலினூடாக தமது வியாபார நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். ஜெனிவா நகரத்தவர்களது வியாபாரம் தனிப்பட்டோர் அமைப்பாகக் காணப்பட்டது. வெனிஸ் வர்த்தகர்களைப் புறக்கணித்து ஐரோப்பாவையும், ஆசியாவையும் இணைக்கின்ற புதிய வழியைத் தேடுவது அவர்களின் முக்கிய குறிக்கோளாய் அமைந்தது.

இக்காலத்தில் கடற்பயணங்களில் ஈடுபட்டிருந்த போர்த்துக்கீசர்களுக்கு ஜெனோவா கப்பல் ஓட்டிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் பெரும் தூண்டுதலை அளித்தது. கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் போர்த்துக்கல் கடற்படையின் அட்மிரல் பதவிக்கு ஜெனோவா நகரத்தவர் ஒருவர் நியமனம் பெற்றார். இமானுவேல் பசென்ஷா எனும் இவரது திறன்கள் புதிய கடல் வழிகளைத் தேடும் முயற்சியில் போர்த்துக்கீசர்களை முன்னணியில் திகழச் செய்த மற்றுமோர் முக்கிய விடயமாகும். இதன்படி வெனிஸ், ஜெனோவா இனத்தவர்களுக்கடையிலான போட்டிகள், கீழைத்தேசங்களுக்கு வருவதற்கான புதிய வழியைத் தேடும் போர்த்துக்கீசர்கள் முயற்சிகளுக்கு தூண்டுதல் அளித்ததை நீங்கள் இப்போது தெளிவாக அறிந்திருப்பீர்கள்.

ஐரோப்பிய இனத்தவர்களுக்கிடையில் காணப்பட்ட கிறிஸ்தவ சமயத்தின் மீதான பற்றும், அதனை முழு உலகத்திலும் பரப்ப வேண்டியது தமது கடமை என்ற உணர்வும் புதிய கடல் வழிகளைக் கண்டுபிடிப்பதில் தூண்டுதல் அளித்த மற்றுமோர் காரணமாகும். மேற்குறிப்பிட்டவாறு 14ம் நூற்றாண்டின் போது துருக்கியர்களின் அதிகாரம் முழு

ஐரோப்பாவிலும் பரவியதன் காரணமாக அவர்களது சமயமாகிய இஸ்லாம் அப்பிரதேசங்களிலும் பரவியது. இதுவரை காலமும் சுதந்திரமாக இயங்கிய கிறிஸ்தவ சமயத்துக்கு இது பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது.
ஐரோப்பிய இனத்தவர்கள் எதிர்நோக்கிய வியாபாரத் தடைகளை முறியடிப்பதற்கு மட்டுமன்றி, கிறிஸ்தவ சமயத்துக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை நீக்குவதற்கும் துருக்கியர்களின் ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டிய கட்டாய நிலையை அவர்கள் உணர்ந்தனர்.

மேற்குறிப்பட்ட குறிக்கோள்களுடன் தமது காலத்தையும் சிரமத்தையும் அர்ப்பணித்த மன்னர்களில் ஹென்றி மன்னன் கடலோடி ஹென்றி எனும் பெயரில் புகழ் பெற்றான். கீழைத்தேச நாடுகளுக்கு கடல் வழிகளைத் தேடுவதற்காக ஜெனோவா வியாபாரிகளின் உதவியையும் அவன் பெற்றுக் கொண்டான். அவன் மேற்கு ஆபிரிக்காவின் கரையோரமாக பிரயாணம் செய்து புதிய கடல் வழி தேடும் முயற்சியில் ஈடுபட்டான். 1460ம் ஆண்டில் ஹென்றி இறக்கும் போது மேற்கு ஆபிரிக்காவின் கடற்கரையோரப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க பகுதி போர்த்துக்கீசர்கள் அதிகாரத்தின் கீழ் காணப்பட்டது.

மூட நம்பிக்கையுடையவர்களை கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றுவதும். அவனது யாத்திரையின் ஒரு நோக்கமாக அமைந்தமையினால் பாப்பாண்டவரின் உதவியும் அவனுக்குக் குறைவின்றிக் கிடைத்தது. 5ம் நிக்கலஸ் பாப்பரசர் (1454) 3ம் கலிஸ்டஸ் (1456) என்போர் அவனுக்கு உதவியளித்தோர் ஆவார்.

மத நம்பிக்கை போர்த்துக்கீசர்களை வியாபாரத்தில் ஈடுபடுவதில் தூண்டுதலாக அமைந்ததைக் காட்டுவதற்கு சிறந்த உதாரணம் 1496ல் போர்த்துக்கலில் ஆட்சி செய்த இமானுவேல் மன்னனின் நடவடிக்கையாகும்.

இக்காலத்தில் போர்த்துக்கல் நாட்டில் விஸ்பன் நகரத்தில் வியாபார நடவடிக்கைகள் யூத இனத்தவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. மத நம்பிக்கை மிகுந்தவனாகக் காணப்பட்ட இமானுவேல் மன்னன் கூட நம்பிக்கை உடையவர்களை கிறிஸ்தவ சமயத்தின் பால் திருப்பிக் கொள்வதற்கு பெரும் முயற்சி செய்தான். யூத இனத்தவர்களுக்கு கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவதற்கு கட்டளையைப் பிறப்பித்ததுடன், இக்கட்டளையைக் பின் பற்றாதவர்களை கொலை செய்வதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்நிலைமையின் கீழ் போர்த்துக்கீசர்களினால் அனேகமான யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். இப் பின்னணியின் கீழ் வியாபாரத்தில் யூதர்கள் பெற்றிருந்த சாதகமான நிலைமைகளை தாம் பெற்றுக் கொள்வதற்காக போர்த்துக்கீசர்கள் முயற்சித்தனர்.

மேற்குறிப்பிட்ட நிலைமையின் கீழ் கீழைத்தேசங்களுக்கான புதிய வழியை கண்டுபிடிக்கும் முயற்சியின் முக்கியம் சம்பவம். கிறிஸ்துவுக்கு பின் 1487ல் பர்த்லோமியுஸ் டயஸ் என்பவன் ஆபிரிக்காவின் புயல் முனையைக் கண்டு பிடித்தமையாகும். பர்த்லோமியுஸ் டயஸ் தென் ஆபிரிக்காவிற்கு வந்தமையினால் ஐரோப்பியர்கள் தென்கிழக்கு நாடுகளுக்கு வரும் செயல் வேகமடைந்தது. அதில் இருந்து இந்து சமுத்திரம் ஐரோப்பியர்களுக்குத் திறந்து விடப்பட்டதாக கருத இடமுண்டு.

இதன்பின், பின்வரும் நோக்கமாக போர்த்துக்கலின் லிஸ்பன் நகரத்தில் இருந்து புறப்பட்ட வாஸ்கொடகாமா 1498 மே மாதம் 27ம் திகதி இந்தியாவின் மேற்கு கரையோரத்தில் காணப்படும் கள்ளிக் கோட்டை (கலிகட்) நகரை அடைந்தான். இது காலம் காலமாக ஐரோப்பிய இனத்தவர்களிடம் காணப்பட்ட கனவு நனவாகிய நிகழ்ச்சியாகும்.

ஐரோப்பிய இனத்தவர்கள் கீழைத்தேச நாடுகளுக்கு வருவதற்கு உரிய காரணங்கள் சிலவற்றை நாம் இதுவரையில் கற்றோம். இக்காரணங்களை இவ்வாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

1. ஐரோப்பாவில் துருக்கியர்களின் ஆதிக்கம் விரிவடைந்ததன் காரணமாக வியாபார நடவடிக்கைகளுக்கு தடைகள் ஏற்படுதல்.

2. துருக்கியர்களின் ஆதிக்கம் விரிவடைந்தமையினால் கிறிஸ்தவ சமயத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதையும், ஐரோப்பிய இனத்தவர்களின் உறுதியான சமயப் பற்றும்.

3. வியாபாரம் தொடர்பாக ஜெனோவா, வெனிஸ் வியாபாரிகளுக்கிடையிலான போட்டிகள்.

4. புதிய கடல் வழிகளைக் கண்டு பிடிப்பதற்கு ஐரோப்பிய மன்னர்களிடம் இருந்து கிடைத்த உதவிகள்.

வாஸ்கொடகாமா இந்தியாவிற்கு வந்த காலத்தில் அண்மையில் உள்ள பிரதேசங்களில் வியாபாரம் முஸ்லிம்களுக்கு உரியதாகக் காணப்பட்டது. அவர்கள் இந்து சமுத்திரத்தில் சுதந்திரமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். கள்ளிக்கோட்டை நகரம் சமோரின் எனும் முஸ்லிம் நிர்வாகியின் கட்டுப்பாட்டில் காணப்பட்டது. அவனுக்கும் வலிமை வாய்ந்த கடற்படை ஒன்று இருந்தது.

இவ்விரு வர்த்தகர்களும் வியாபாரிகளாக இருந்தபோதிலும், போர்த்துக்கீசர்கள் ஆயுதம் தாங்கிய வியாபாரிகளாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக இது காலவரையில் இந்து சமுத்திரத்தில் நடைபெற்று வந்த சுதந்திரமான வியாபாரத்தின் தன்மை மாற்றமடைந்தது. சமோரினின் கடற்படைக்கு போர்த்துக்கீசர்களின் கடற்படையை மீறிச் செல்ல முடியவில்லை. இந்தியாவிற்கு வந்த வாஸ்கொடகாமாவுக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக சமோரினரின் அனுமதி கிடைத்தது. கி.பி. 1500ல் பேதுரு அல்வாரேஸ் சுப்ரால் எனும் போர்த்துக்கீசத் தளபதி சமோரினுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் வியாபாரம் தொடர்பான கருத்து முரண்பாடுகள் காரணமான சமோரின் போர்த்துக்கீசர்களைத் தாக்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. எவ்வாறாயினும் போர்த்துக்கீசர்களின் இவ்வியாபார நடவடிக்கைகள் சமோரினுக்கு பாதகமாகவே அமைந்தது என்பதை மறக்க முடியாது.

போர்த்துக்கீசர்கள் இவ்வாறு கீழைத்தேச நாடுகளுக்கு வந்தபின் கீழைத்தேச நாடுகளுக்கான முதலாவது போர்த்துக்கீச ஆள்பதியாக “ தொன் பிரான்ஸிஸ்கோ டி அல்மேதா ” என்பவன் நியமனம் செய்யப்பட்டான். அவன் இந்து சமுத்திரத்தின் முழு வர்த்தகத்தையும் தமக்குக் கீழ் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டான். இவ்வாறான எண்ணத்துடன் அவன் மாலைதீவினூடாகப் பிரயாணம் செய்யும் முஸ்லிம் வியாபாரிகளின் கப்பல்களைக் கைப்பற்றுவதற்காக தனது மகன் “லோறன்சோ டி அல்மேதா ” என்பவனை அனுப்பினான். இவ்வாறு வந்த லோறன்சோ டி அல்மேதாவும் அவனது கடற்படையினரும் கடற்புயலில் அகப்பட்டு 1505ல் இலங்கையில் காலித்துறைமுகத்தை அடைந்தனர். இதுவோர் எதிர்பாராத நிகழ்வாகும். பின்னர் கொழும்பை நோக்கிப் பயணம் செய்தனர். போர்த்துக்கீசர்கள் இலங்கையை வந்தடைந்தமை ஓர் சம்பவமாக இல்லாது சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலம் கடற்கரையோரப் பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டு இங்கு தங்கியிருப்பதற்கு வழிவகுத்த சம்பவமாக இது அமைந்தது. ஐரோப்பியர்களின் ஆதிக்கமும், அதிகாரமும் இலங்கையில் பரவுவதற்கு தொடங்கியதும் போர்த்துக்கீசர்களின் வருகை முதலே ஆகும். பின்னொரு காலத்தில் ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்ற ஏனைய ஐரோப்பிய இனத்தவர்களும் இலங்கைக்கு வந்தததன் மூலம் முக்கிய மாற்றங்கள் பலவற்றுக்கு வழியமைத்ததும் இது முதலே ஆகும். போர்த்துக்கீசர்கள் இலங்கைக்கு வருவதற்கான காரணங்களை இதுவரை நாம் கற்றோம். அவர்கள் இலங்கைக்கு வரும்போது இலங்கையில் காணப்பட்ட அரசியல் பின்னணி எவ்வாறு காணப்பட்டது என்பதை அடுத்து ஆராய்வோம்.

**பெப்பிரவரி இதழில் தொடரும்**

## வாழ்க வளமுடன்

## ஜோக்ஸ்

**மாணவன் 1 :** நம்ம கணக்கு மாஸ்டருக்கு அறிவே இல்லடா.

**மாணவன் 2:** ஏன்டா அப்படிச் சொல்றா?

**மாணவன் 1:** அவரோட 4வது பொண்ணுக்கு அஞ்சு என்று பெயர் வச்சிருக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**ஆசிரியர் :** மனுஷனாப் பிறந்தா எதையாச்சும் சாதிக்கனும்.

**மாணவன் :** நல்லகாலம் நான் குழந்தையா பிறந்திட்டேன்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**ஒருவர் :** ஆபிரேசன் தியேட்டரிலிருந்து டாக்டர் ஏன் வெளியே கோபமா வர்றாரு ?

**அடுத்தவர் :** ஆபரேசன் தியேட்டர்ல எவனோ உடல் மண்ணுக்கு உயிர் டாக்டருக்கண்னு எழுதி வெச்சிட்டானாம்.

**( ஜோக்ஸ் எவரும் அனுப்பலாம்)**

# I, II E இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிறுவப்படுதல்

15ஆம் நூற்றாண்டின் இறுதியில் கீழைத்தேயத்துக்கு வந்த முதல் ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்கேயர் கிழக்கில் தமது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்ட போதிலும் 17ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் அது வீழ்ச்சியடைந்தது. கிழக்கில் போர்த்துக்கேயரின் அதிகாரம் வீழ்ச்சியடையும் போது அவ்விடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் போன்றோர் இந்து சமுத்திரத்தில் நுழைந்து கொண்டனர். ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் உட்பட தென்கிழக்கு ஆசியாவின் அநேக பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர். ஆங்கிலேயரின் கவனம் பெரும்பாலும் இந்தியாவிலேயே இருந்தது. அதற்குச் சிறிது காலத்தின் பின் வந்த பிரான்சியரின் கவனமும் முக்கியமாக இந்தியாவின் பக்கமே இருந்தது. எனவே இந்தியாவில் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதில் பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியின் விளைவாக இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்ற வேண்டிய தேவையும் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. ஆங்கிலேயர் இலங்கையை தமது ஆதிபத்தியத்தின் கீழ் கொண்டு வருவதற்குப் பின்னணியாக அமைந்த அவர்களுக்கும் பிரான்சியருக்கும் இந்தியாவில் ஏற்பட்ட அதிகாரப் போட்டி யாது எனப் பார்ப்போம்.

ஆசியப் பிரதேசங்களின் நடவடிக்கைகளை கவனித்ததும், ஒழுங்கமைப்புச் செய்ததும், 1601 இல் அமைக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் மூலமாகும். இக் கம்பனியின் அடிப்படை நோக்கம் வர்த்தகமாக இருந்த போதிலும் படிப்படியாக இது ஆசியாவின் பிரதான ரீதியிலான ஏகாதிபத்தியமொன்றை உருவாக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது. பிரான்சியரும் 1664 இல் அமைத்துக் கொண்ட பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனி மூலமாக ஆசியாவில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பிரான்சியரும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு புறம்பாக ஏகாதிபத்திய நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சி செய்தனர் இருபிரிவினரினதும் கவனம் இந்தியாவில் நிலைத்திருந்த போது இந்தியாவின் நிலை எவ்வாறிருந்தது எனப் பார்ப்போம்

கி.பி. 1526 இல் வட இந்தியாவில் அதிகாரத்தை நிலைநாட்டிய மொகலாயர் (முஸ்லிம்கள்) படிப்படியாக அக்பர் சக்கரவர்த்தியின் காலத்தில் இந்தியாவையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். மொகலாய ஏகாதிபத்தியத்தின் பலமிக்க அரசான ஔரன் கஷிப் 1707 இல் மரணித்ததன் பின் இந்தியாவின் சில பிரதேசங்களில் சுயாதீன இராச்சியங்கள் தோன்றின. இச் சுயாதீன அரசுக்கிடையேயான அதிகாரப் போராட்டத்துக்கான யுத்தங்களில் உதவிக்கு வந்த பிரித்தானியரும், பிரான்சியரும் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தொடர்புபட்டனர். இதன் விளைவாக இந்தியாவுடன் நிலையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு 1688 இல் சுரான்ஹியிலும், 1674 இல் பாண்டிச்சேரியிலும் பண்டசாலைகள் அமைக்கப்பட்டன. 1739இல் மராட்டிய அரசின் சென்னை ஆட்சியாளருடனும் கர்நாடக ஆட்சியாளர்களுடனும் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும், அதன் மூலம் சூழவுள்ள பிரதேசங்களில் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் பிரித்தானியருக்கு வாய்ப்புக் கிடைத்தது. மராட்டியருக்கும், தக்கண ஆட்சியாளன் அசாம்ஜாவுக்கும் இடையிலான மோதலில் தக்கண ஆட்சியாளனுக்கு உதவி வழங்கி அப்பிரதேசத்தில் பிரித்தானியரின் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

சமகாலத்தில் இந்தியாவில் பிரான்சிய அதிகாரம் பரவியதுடன் குறிப்பாக 1728ல் முதல் டுப்பேளியின் கீழ் 20 வருட காலத்துள் இந்தியாவில் பிரான்சிய ஆதிக்கம் ஆங்கிலேயருக்கு சமமான அளவில் விரிவடைந்தது. 1746இல் சென்னையைக் கைப்பற்ற முடிந்த போதிலும், 1748இல் கெஸ்லா செபேல் ஒப்பந்தப்படி சென்னையை ஆங்கிலேயருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வருடத்தில் தந்திரமாகவும், சதிமூலமாகவும் இந்தியாவின் வியாகூலமான அரசியல் சூழலில் இருந்து பயனடைந்து கொண்ட பிரான்சியர் கர்நாடகத்திலும் தக்கண பிரதேசத்திலும் தமக்கு ஆதரவான ஆட்சியாளர்களை நியமித்துக் கொள்வதில் வெற்றி கண்டனர். இவ்வாறு 1751இல் இந்தியாவில் பிரான்சியரின் ஆதிக்கம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு சவாலாக அமையும் அளவுக்கு விரிவடைந்தது. இந்தியாவினுள் ஆங்கிலேயரும் பிரான்சியரும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள மேற்கொண்ட போட்டியில் இந்தியாவில் காணப்பட்ட சிறிய அரசுகளுக்கு உதவி வழங்குவதன் மூலமாக பிரான்சியரின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதை ஆங்கிலேயர் நோக்கமாகக் கொண்டனர். இவ்வடிப்படையில் 1751 முதல் 1755 வரை உள்ள காலத்தில் திருச்சிராப்பள்ளி, கர்நாடகம், சென்னை, பாண்டிச்சேரி போன்ற பிரதேசங்களைக் கைப்பற்றவதில் ஆங்கிலேயர் வெற்றி கண்டனர். 1767இல் வங்காளம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு இந்தியாவில் பிரித்தானியரும் பிரான்சியரும் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபட்டு பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் போது அவர்கள் ஏன் இலங்கை மீது கவனம் செலுத்தினார்கள் என்பதை உங்களால் ஊகிக்க முடியும். அது தொடர்பான கற்கையில் மேலும் நாம் இந்தியாவில் மீது கவனம் செலுத்துவோம்.

1798இல் பிரித்தானிய ஆதிக்கம் இந்தியாவின் அநேக பிரதேசங்களில் பரவியிருந்ததை அதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். இதன்படி வங்காளம், கர்நாடகம், சென்னை கள்ளிக்கோட்டை ஆகிய பிரதேசங்கள் பிரித்தானியர்

வசம் இருந்தன என்பது தெளிவு. இந்தியாவில் உள்ள இப்பிரதேசங்களைக் காக்கவும், இந்து சமுத்திரத்தில் பிரித்தானியரின் அதிகாரத்தை பரப்பவும் இலங்கை முக்கியமான மத்திய நிலையம் என்பதை பிரித்தானியர் ஏற்றுக் கொண்டனர். இங்கு இந்தியாவின் கிழக்குக் கரையில் கடல்சார் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த இலங்கையின் இயற்கைத் துறைமுகமான திருகோணமலையை கடல்சார் மையமாக (கடற்தளமாக) கருதினர். திருகோணமலைத் துறைமுகம் அதன் இயற்கை அமைவுக்கேற்ப மலைகளால் பாதுகாக்கப்பட்டிருந்தது. தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் இந்தியாவின் கிழக்குக் கரையில் கப்பல்களை நிறுத்துவது பெரும்பாலும் கஷ்டமானதாக இருந்தது. காற்றினால் அவை அடித்துச் செல்லப்பட்டு உடைந்தன. இந்தியாவின் கிழக்கில் கல்கத்தா துறைமுகம் பாதுகாக்கப்பட்ட இயற்கைத்துறைமுகமாக இருந்தது. எனினும் கல்கத்தா கிழக்குக் கரையோரத்தின் முனையில் இருந்தமையினால் அது அவ்வளவு தூரம் பயனுள்ளதாக இருக்கவில்லை. திருகோணமலையில் தரித்து வைக்கப்படும் கப்பல்கள் மிகவிரைவாக இந்திய கிழக்குக் கரையில் மத்திய தளங்களுக்கு கொண்டு செல்ல முடிந்தமையால் அவற்றைப் பாதுகாக்க முடிந்தது. இந்தியாவில் ஆங்கில ஆதிக்கத்தை பாதுகாத்து இந்து சமுத்திரத்தில் தமது அதிகாரத்தைப் பரப்புவதற்கு திருகோணமலையின் முக்கியத்துவத்தை மீண்டும் சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்.

- கிழக்கு இந்தியாவின் கடற்பலத்தை திருகோணமலையில் இருந்து கட்டுப்படுத்த முடிந்தமை.
- எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து இயற்கையான பாதுகாப்புக் கிடைத்தமை
- முக்கிய வர்த்தக மத்திய நிலையமாக உருவாக்க முடிந்தமை
- கல்கத்தா துறைமுகம் தூரத்தில் அமைந்திருந்தமை
- கீழைத்தேய கடற் சந்தியாக இருந்தமை.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் ஆங்கிலேயர் இந்தியாவில் தமது ஆட்சியை உறுதிப்படுத்தவும்,பிரான்சிய ஆதிக்கத்தை வெற்றி கொள்ளவும் இலங்கை முக்கிய இடமாக இருந்தது. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும் 1958 ஆம் ஆண்டுவரை திருகோணமலைத்துறைமுகம் அதன் முக்கியத்துவம் காரணமாக பிரித்தானிய நிர்வாகத்தின் கீழேயே இருந்தது.

பிரித்தானிய ஏகாதிபத்திய பரம்பலின் இலங்கை பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாக ஆங்கிலேயனான ஜோன் பயிபஸ் இலங்கையில் ஆங்கிலக் குடியேற்றமொன்றை அமைப்பதற்காக 1792இல் மலைநாட்டு அரசின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு தூதுக்குழுவுடன் வந்தான். இலங்கையில் இருந்து ஒல்லாந்தரை துரத்துவதற்காக ஆங்கிலேயரின் உதவியைப் பெறும் நோக்குடன் மலைநாட்டு மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் இதற்கு உடன்பட்ட போதிலும், இக் கலத்தில் ஐரோப்பாவில் ஒல்லாந்தருக்கும், பிரித்தானியாருக்கும் இடையே இருந்த நட்பு இதற்கு தடையாக அமைந்தது. எனினும்  இந்நட்பு நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை.

அமெரிக்க சுதந்திரப் போரில் பிரித்தானியருக்கு எதிராக குடியேற்றவாசிகளுக்கு ஒல்லாந்தர் உதவியளித்ததன் காரணமாக இந்நட்புறவு முறிவடைந்தது. 1781 அளவில் இருசாராருக்குமிடையில் மீண்டும் மோதல் ஏற்பட்டதுடன், இலங்கையில் கரையோரப் பிரதேசங்களில் இருந்து ஒல்லாந்தரைத் துரத்துவதற்கு அப்போது மலைநாட்டின் அரசனாக இருந்த ராஜாதி ராஜசிங்கனின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் ஆங்கிலேயர் ஆர்வம் காட்டினர். எனினும் 1762 உடன் படிக்கையின் பிரகாரம் மலைநாட்டுக்கு உதவியளிப்பதில் கவனம் செலுத்தப்படாததனால் மன்னர் பிரித்தானியர் பால் நம்பிக்கை வைக்கவில்லை. அதன் காரணமாக அம்முயற்சி தோல்வியடைந்தது.

இலங்கையில் ஒல்லாந்தருக்குரிய பிரதேசங்கள் பிரித்தானியருக்கு சொந்தமாவதற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அதிகாரப் போராட்டம் காரணமாக  இருந்தது. 1789 பிரான்சியப் புரட்சியின் பின் அந்நாட்டில் தோன்றிய கூட்டரசாங்க ஆட்சியின் கீழ் ஏனைய நாடுகளைக் கைப்பற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. எனவே 1792 இல் பிரான்சியப் படை ஒல்லாந்ததைக் கைப்பற்றி அங்கு கூட்டாரசாங்கம் ஒன்றை உருவாக்கிற்று ஒல்லாந்தில் அரசனாக இருந்த 5ஆம் வில்லியம் தப்பிச் சென்று இங்கிலாந்தில் பாதுகாப்புத் தேடினான். எனவே இங்கிலாந்து ஒல்லாந்தருக்கும் பிரான்சுக்கும் எதிராக யுத்தப் பிரகடனம் செய்தது. இக்காலத்தில் ஒல்லாந்தருக்குச் சொந்தமான இலங்கை உட்பட்ட கிழக்குப் பிரதேசங்களை பிரான்சிய செல்வாக்கில் இருந்து பாதுகாப்பதற்கான உபாயமாக வில்லியம் இளவரசனிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஒன்று இலங்கையின் ஒல்லாந்த ஆளுனரான அன்கள்பேக் இடம் கையளிக்கப்பட்டது. கிழக்கில் உள்ள ஒல்லாந்த பிரதேசங்களை பிரான்சிய ஏகாதிபத்தியத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அப் பிரதேசத்துக்கு ஆங்கில படைகளை அனுமதிக்குமாறு அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒல்லாந்த அரச தலைவனின் கடிதம் தொடர்பாக இணக்கத்துக்கு வர இலங்கையில் இருந்த ஒல்லாந்த அதிகாரிகளால் முடியாதிருந்தது. எனவே அதன் விளைவாக பன் அன்கள்பேகன் அக்கடிதத்தை

நிராகரித்தான். இதற்கிடையில் ஆங்கிலப்படை 1795இல் ஆகஸ்ட் 18 இல் திருகோணமலையைத் தாக்கி ஆகஸ்ட் 25இல் அதனை கைப்பற்றிக் கொண்டது. அவ்வருடம் ஒக்டோபர் 6ம் திகதி அளவில் மட்டக்களப்பில் இருந்து மன்னார் வரையான கரையோரப்பகுதிகளில் உள்ள கோட்டைகள் ஆங்கிலேயப் படையினரின் கீழ் வந்தன. 1796இல் கொழும்பு கைப்பற்றப்பட்டதுடன், ஒல்லாந்த அரசன் பன் அன்கல்பேர்க் கொழும்பு நகரையும் ஒல்லாந்தருக்குச் சொந்தமான இலங்கையின் ஏனைய பிரதேசங்களையும் 1979 பெப்ரவரி 15இல் பிரித்தானியருக்குக் கையளித்தான் இவ்வாறு 1762இல் ஜோன் பைபஸின் தூதுவப் பயணத்துடன் ஆரம்பித்து 1796இல் கொழும்பைக் கைப்பற்றியதுடன் இலங்கையின் கரையோரப்பகுதிகளின் ஆதிக்கம் ஆங்கிலேயர் வசம் வந்தது. 1802 மார்ச் 25 இல் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே இடம் பெற்ற ஏமியன்ஸ் சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் சட்டமுறையான உரிமையாளர்களாக மாறினர்.

**பெப்பிரவரி இதழில் தொடரும்**

## வரலாறு செயற்பாடு அட்டை

**தரம் 11**

**தயாரிப்பு : ஜோ.நோமன் பல்தஸார் Rtd: S.L.P.S.1**

01) இலங்கையை ஆட்சி புரிந்த ஐரோப்பிய நாட்டவர் யார்? அவர்கள் ஆட்சி செய்த காலம் என்ன? ஒழுங்கு முறையில் தருக

| ஆட்சிசெய்தோர் | காலம் |
|---|---|
| 1. -------------------------------- | -------------------------------- |
| 2. -------------------------------- | -------------------------------- |
| 3. -------------------------------- | -------------------------------- |

02) பிரித்தானியர் இலங்கையில் கைப்பற்றிய முதல் இடம் எது? கடைசியாக கைப்பற்றிய இடம் எது? காலத்தையும் தருக

| கைப்பற்றிய இடம் | காலம் |
|---|---|
| 1. -------------------------------- | -------------------------------- |
| 2. -------------------------------- | -------------------------------- |

03) பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றும் போது, இலங்கையில் இருந்த ஆட்சிப் பிரிவுகள் எவை? அவற்றை ஆட்சி புரிந்தோர் யார்?

| ஆட்சிப் பிரிவு | ஆட்சி புரிந்தோர் |
|---|---|
| 1. -------------------------------- | -------------------------------- |
| 2. -------------------------------- | -------------------------------- |
| 3. -------------------------------- | -------------------------------- |

04) பிரித்தானியர் இலங்கையில் தமது அதிகாரத்தை நிலை நாட்ட பிரதான காரணிகள் மூன்று

1. ------------------------------------------------------------------------------
2. ------------------------------------------------------------------------------
3. ------------------------------------------------------------------------------

05) பிரித்தானியர் கண்டி இராட்சியத்தைக் கைப்பற்ற முயற்சி எடுத்த இரு ஆளுணர்களின் பெயர்களைத் தருக. அவர்களின் முயற்சியின் பெறுபேறு என்ன?

| ஆளுனர் பெயர் | பெறுபேறு |
|---|---|
| 1. -------------------------------- | ------------------------------------ |
| 2. -------------------------------- | ------------------------------------ |



A



B



C



D

மேலே A, B, C, D என நான்கு படங்கள் தரப்பட்டுள்ளது பின்வரும் 6, 7, 8, 9 வினாக்களுக்கு உரியவரின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் தருக.

06) இலங்கையின் முதல் ஆள்பதி ? ---------------------------------------------

07) கண்டி இராட்சியத்தை கைப்பற்றிய ஆள்பதி ? ------------------------------------

08) கந்தளாய் குளத்தை புணரமைப்புச் செய்தவர் --------------------------------------

09) கிழக்கு மாகாணத்தில் இறக்காமம், அம்பாறை ஆகிய குளங்களை புணரமைப்புச் செய்தவர்-----------

❖ பிரித்தானியர் காலத்தில் பின்வரும் சம்வங்கள் நிகழ்ந்த ஆண்டினை புள்ளிக் கோட்டில் தருக.

10) பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை தமதாக்கிக் கொண்டமை ----------------

11) ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனி நிர்வாகத்திற்கு எதிரான கிளர்ச்சி ஏற்பட்டமை---------------

12) இலங்கையில் “இரட்டை ஆட்சி ” நடை பெற்றமை --------------------------------------

13) கரையோர நிர்வாகத்திலிருந்து வர்த்தக கம்பனி நீக்கப்பட்டு பிரித்தானிய முடிக்குரிய நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டது. ----------------------------------------

14) பிரடரிக் நோத் கண்டி இராட்சியத்தின் மீது போர் தொடுத்தமை ---------------------------

15) பிரடரிக் நோத் இலங்கையின் ஆளுநராக இருந்த காலம் ---------------------------------

16) தோமஸ் மெயிலண்ட் இலங்கையில் ஆளுநராக இருந்த காலம் ----------------------------

17) றொபட் பிரெளவுன்றிக் இலங்கையில் ஆளுநராக இருந்த காலம் ----------------------------

18) கண்டி இராட்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றியது.-------------------------------------

19) கண்டியின் பிரதம அமைச்சரான பிலிமத்தலாவை கண்டி மன்னனுக்கு எதிராக செய்த சதி தெரிய வந்ததால் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டமை ------------------------------------

20) எஹலப்பொல மன்னனுக்கு எதிராக சதி செய்து தோல்வியடையவே ஆங்கிலேயரிடம் சரணடைந்தமை ----------------------------------

| |
|---|
| விடைகளை பெப்பிரவரி இதழில் எதிர்பாருங்கள்<br>செயற்பாடு அட்டை தொடரும் |

# வரலாறு செயற்பாடு அட்டை தரம் – 9

## அலகு : 16 ஆம் நூற்றாண்டில் இலங்கை

1) 16ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இலங்கையில் காணப்பட்ட மூன்று அரசியல் பிரிவுகள் எவை?
1.------------------------------------------------ 2. --------------------------------------------- 3.---------------------------------------------------------

2) 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பலம் மிக்க இராச்சியமாக காணப்பட்டது. எது?
1 ------------------------------------------------------------------------------------------------------------------------------------

3) 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் இருந்த மூன்று இராச்சியப் பிரிவுகளில் ஆரம்பகால அரசர் யார்? 1.------------------------------------------------ 2. --------------------------------------------- 3.---------------------------------------------------------

4) 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்த மூன்று இராச்சியத்தின் தலைநகரம் எது?
1. ---------------------------------------------- 2. --------------------------------------------- 3. --------------------------------------------------------

5) 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வன்னி அரசர்களால் ஆளப்பட்ட மூன்று பிரதேசங்கள் தருக
1. ---------------------------------------------- 2. --------------------------------------------- 3. --------------------------------------------------------

6) விஜயபாகு கொலைக்குப் பின் கோட்டை இராச்சியம் பிளவுபட்ட பிரிவுகள் எவை? அவற்றை ஆட்சி செய்த அரசர்கள் யார்?

| பிளவுபட்ட பிரிவு | ஆட்சி செய்த அரசன் |
|---|---|
| 1. --------------------------------------------------------------- | 1. ------------------------------------------------------------------------------ |
| 2. --------------------------------------------------------------- | 2. ------------------------------------------------------------------------------ |
| 3. --------------------------------------------------------------- | 3. ------------------------------------------------------------------------------ |

7) விஜயபாகு கொலை நடைபெற்ற ஆண்டு -----------------------------------------------------------------------------------------

8) வாஸ்கொடகாமா இந்தியாவிற்கு வந்த ஆண்டு -----------------------------------------------------------------------------------------

9) போர்த்துக்கேயர் முதன்முதலில் இலங்கை வந்த ஆண்டு -----------------------------------------------------------------------------------------

10) போர்த்துக்கேயர் இலங்கையில் வந்திறங்கிய போது தலைமை வகித்த தளபதி
------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வினா 11 தொடக்கம் 20 வரை கீறிட்ட இடத்தை நிரப்புக.

11) போர்த்துக்கேயரால் -----------------------------------------------------------------------சமயம் இலங்கையில் பரப்பப்பட்டது

12) 6ம் விஜயபாகுவின் பட்டத்துராணியின் புதல்வர்கள் புவனேகபாகு. றைகம பண்டார------------------------------------------------ ஆகியோராவார்.

13) புவனேகபாகுவின் மருமகனின் (பேரன்) பெயர்-------------------------------------------------------------------------------- ஆவர்

14) யாழ்ப்பாண இராட்சியத்தைக் கைப்பற்ற கோட்டையிலிருந்து ------------------------------------------------என்னும் இளவரசன் அனுப்பப்பட்டான்

15) புராதன கால வியாபாரம் ------------------------------------------------முறை மூலம் நடைபெற்றது

16) 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில்---------------------------சமயமும் ----------------------சமயமுமே காணப்பட்டன.

17) போர்த்துக்கேயர் இலங்கை வருவதற்கு முன் இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளில் ------------------------------------------ ஆதிக்கம் கொண்டிருந்தனர்.

18) முல்லேரியா போர் -----------------------ஆம் ஆண்டில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர். -------------------------ஆவார்.

19) மாயாதுன்னையின் மகனின் பெயர்-------------------------------------ஆகும்.

20) கல்வி, அரசியல் பயிற்சி பெற------------------------------------------------------------------ போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

விடைகளை பெப்பிரவரி இதழில் எதிர்பாருங்கள்
செயற்பாடு அட்டை தொடரும்

# பிறந்த நாளி வாழ்த்து

2009 ஜனவரி மாதத்தில் பிறந்த நாளைக் கொண்டாடும் எமது அருமை மாணவர் நெஞ்சங்களுக்கு எமது அன்பான வாழ்த்துக்கள்.

"கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்பவல்லவர். எந்தச் சூழ் நிலையிலும், எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்கு தருவார் அனைத்து நற் செயல்களையும் செய்வதற்கும், கல்வியில் வளர்ச்சிபெற தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார் "

வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்

- இதழாசிரியர் -

Visit us : www.divin mercyshrine.org

**அடுத்த இதழ்**
2009. பெப்பிரவரி 13 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை வெளிவரும்

இவ் விதழ் திரு. ஜோ நோமன் பல்தஸார் அவர்களால் உருவாக்கி நெறியாழ்கை செய்யப்பட்டு அஸ்ரா அச்சகத்தில் அச்சிடப்பட்டு 16.1.2009 அன்று திருகோணமலை இறை இரக்க ஆலயத்தில் வெளியிடப்பட்டது.
இணையத்தளம் : www.divinemercyshrine.org